enacted by this Legislature, that power has been removed. The Legislature intended and that was the Government's intention that the elected body should not have these judicial functions, civil or criminal functions. Therefore, Government do not think it necessary to evaluate what was done by panchayat courts previously.

SRI S. K. SAMBANDHAN : Will the Hon. Minister tell us how many panchayat courts are now being conducted by the village munsiffs in the State of Madras?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I would like to have notice.

Mechanised boats

* 127 *Q.*—SRI J. PONNUSAMY VILLAVARAYAR : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) the number of mechanised boats given to fishermen on hire purchase system by the Fisheries Department as on 1st August 1962 ;

(*b*) the total cost of these mechanised boats ; and

(*c*) the number of mechanised boats given to (i) individuals and (ii) co-operative societies and the amount collected from them and the amount that remains to be collected as on 1st August 1962?

கனம் திரு. என். எஸ். எஸ். மன்ருடியார் : (அ) 116 விசைப்படகுகள்;

(ஆ) அந்தப் படகுகளின் மொத்த விலை ரூ. 20,20,94,3·74 ந.பை.

(இ) மீனவர் தொகுதிகளுக்குக் கொடுக்கப்பட்டவை 76 படகுகள். (1—8—1962 நிலைமை.)

மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுத்தவை 40 படகுகள். (1—8—1962 நிலைமை.)

வசூலிக்கப்பட்ட தொகை ரூ- 2,80,477·85.

வசூலிக்கப்படவேண்டியது ரூ. 10,03,495·92.

திரு. ஜே. பொன்னுசாமி வில்லவராயர் : தலைவர் அவர்களே, இந்த விசைப் படகு சகல இடங்களிலும் செய்யப்படுகிறது. அப்படி ஒரு இடத்தில் செய்யப்பட்ட விசைப் படகு மற்ற இடங்களுக்கு உதவக் கூடியதாக இருக்கிறதா ? மேலும் விசைப் படகுக்காக எத்தனை இஞ்சின்கள் வாங்கப்பட்டன ? எத்தனை மிஷின்கள் பூட்டப்படாமல் தேங்கி இருக்கின்றன என்று தெரிவிக்கப்படுமா ?

கனம் திரு. என். எஸ். எஸ். மன்ருடியார் : சகல இடங்களிலும் செய்யப்பட முடியாது. மூன்று இடங்கள் குளச்சல், மற்றும் சென்னை, தூத்துக்குடி ஆகிய இடங்களில் செய்யப்பட்டு வருகிறது. மற்ற கேள்விகள் தனியாகப் போட்டால் பதில் சொல்லலாம்.

திரு. ஜே. பொன்னுசாமி வில்லவராயர் : தூத்துக்குடியில் செய்யப்பட்ட விசைப் படகு இப்போது குறைந்த விலையில் செய்யப்பட்டும், அது மேலும் செய்யப்படாமல் நிறுத்தப்பட்டிருக்கிறதா ? அதை ராயபுரத்தில் மாற்றி அங்குதான் செய்யப்படும் என்று சொல்லப்படுகிறதா ?

கனம் திரு. என். எஸ். எஸ். மன்ருடியார் : ராயபுரத்தில் பெரிய படகு கட்டும் நிலையம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அங்கு இருந்தால் நன்ருக இருக்கும் என்று எண்ணுகிறோம். அங்கு வேண்டாமென்று உத்திரவு போடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.